RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 256 | செப்டம்பர்.17 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# பிஹாரில் ரூ.36,000 கோடியில் நலத்திட்டங்கள்: பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்

பாட்னா: செப்.17-

பிஹாரில் ரூ.36,000 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கிவைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். பிஹாரின் பூர்ணியா நகரில் புதிய விமான நிலையம் கட்டப்பட்டு உள்ளது. இந்த புதிய விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்துவைத்தார். அங்குள்ள எஸ்எஸ்பி மைதானத்தில் நடைபெற்ற விழாவில் ரூ.36,000 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கிவைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். ஒரு வந்தே பாரத் ரயில், 3 அம்ரித் பாரத் ரயில்களின் சேவையை அவர் தொடங்கி வைத்தார்.



விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: கடந்த 11 ஆண்டுகளில் 4 கோடி ஏழை குடும்பங்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன. புதிதாக 3 கோடி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த கால ஆட்சியில் பிஹாரின் பூர்ணியா, சீமாஞ்சல் பகுதிகள் பின்தங்கிய நிலையில் இருந்தன.

தற்போது இந்த பகுதிகளின் வளர்ச்சிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இரட்டை இன்ஜின் அரசால் பிஹார் முழுவதும் வளர்ச்சித் திட்டப் பணிகள் வேகம் பெற்றுள்ளன. காங்கிரஸும் ராஷ்டிரிய ஜனதா தளமும் வாக்கு வங்கி அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

இரு கட்சிகளின் தலைவர்களும் ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவாக பேசி வருகின்றனர். இதனால் பிஹாரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எழுந்திருக்கிறது. பிஹாரின் வளங்கள் கொள்ளையடிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. மாநிலத்தை ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி ஊடுருவல்காரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவர்கள் பிஹாரில் நுழைய, தங்க அனுமதிக்க மாட்டோம்.

கடந்த கால ராஷ்டிரிய ஜனதா தள ஆட்சியின்போது சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருந்தது. கொலைகள், பாலியல் வன்கொடுமைகள் அன்றாட நிகழ்வுகளாக இருந்தன. இதன்காரணமாக கடந்த 20 ஆண்டுகளாக காங்கிரஸையும் ராஷ்டிரிய ஜனதா தளத்தையும் பிஹார் மக்கள் புறக்கணித்து வருகின்றனர்.

தற்போது தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் பிஹாரின் சட்டம், ஒழுங்கு மேம்பட்டிருக்கிறது. பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. கிராமப்புற பெண்கள் ட்ரோன்களை இயக்க சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் பெண்களின் வருவாய் பெருகி உள்ளது.

வாக்காளர் சிறப்பு பட்டியல் திருத்தப் பணியை எதிர்த்து காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சிகள் பொய்களை பரப்பி வருகின்றன. இதை மக்கள் நம்ப தயாராக இல்லை.

இரு கட்சிகளும் வாரிசு அரசியலை ஊக்குவித்து வருகின்றன. காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தள தலைவர்களுக்கு மக்கள் நலனில் அக்கறை கிடையாது. அவர்கள் குடும்ப நலனில் மட்டுமே அக்கறை செலுத்துகின்றனர். என்னைப் பொறுத்தவரை மக்களே, எனது குடும்பம். மக்களின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வருகிறேன்.

முதல்வர் நிதிஷ் குமார் தலைமையிலான ஆட்சியில் பிஹார் தற்போது அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இது சிலருக்கு பிடிக்கவில்லை. சிலருக்கு (ராகுல் காந்தி) பிஹாரின் உணவு வகைகள் குறித்துகூட தெரியாது. ஆனால் அந்த நபர்கள் பிஹாரில் சுற்றித் திரிகின்றனர். விரைவில் தீபாவளி, சாத் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது.

ஜிஎஸ்டி வரி விகித மாற்றத்தால் இந்த பண்டிகை காலங்கள் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கும். வரும் 22ம் தேதி ஜிஎஸ்ஜி 2.0 வரி விகிதம் அமல் செய்யப்பட உள்ளது. இதன்மூலம் அத்தியாவசிய பொருட்களின் விலை குறையும். குறிப்பாக பெண்களின் சமையல் செலவு கணிசமாக குறையும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.





## சிப்காட் மருத்துவ சுத்திகரிப்பு ஆலையின் அனுமதியை ரத்து செய்யக்கோரி வியாபாரிகள் மானாமதுரையில் கடையடைப்பு

மானாமதுரை செப்.17

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் மருத்துவ கழிவு சுத்திகரிப்பு ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து கட்சிகள் நகர் வர்த்தக சங்கம் மற்றும் 1000ற்கும் பொதுமக்கள் போராட்டம் நேற்று நடத்தினர். சிப்காட் வளாகத்தில் மருத்துவ கழிவு சுத்திகரிப்பு ஆலைக்கு தனியார் நிர்வாகம், முயற்சித்தது. இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் கடந்தஆண்டு மானாமதுரையில் துவக்கப்பட்டது. இங்கு மருத்துவ கழிவு சுத்திகரிப்பு ஆலை துவங்கினால், கழிவு மூலம் இப்பகுதி மக்களுக்கு நுரையீரல் பாதிப்பு, சுவாசம் மூலம் நோய் தொற்று ஏற்படும் அச்சம் இருப்பதாக கூறி, மானாமதுரை அருகே உள்ள சூரக்குளம் பில்லறுத்தான், கொன்னக்குளம், கல்குறிச்சி, உடைகுளம், சிப்காட் பகுதி மக்கள் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல கட்ட போராட்டங்களை நடத்தினர். ஆலையே துவக்க கூடாது என மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தநிலையில், அங்கு அதற்கான கட்டுமான பணிகள் தடையின்றி நடந்தது. மருத்துவ கழிவு ஆலையை அனுமதியை ரத்து செய்யக்கோரி கடந்த ஒரு வாரம் காலமாக நகர் பகுதியில் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட போவதாக அனைத்துக் கட்சிகளின் சார்பில் துண்டு பிரசுரங்கள் வழங்கி நேற்று அதன்படி வியாபாரிகள் ஒத்துழைப்பின் பேரில் கடைகள் அடைக்கப்பட்டு வியாபாரிகள் பொதுமக்கள் அனைவரும் சிப்காட் பகுதியில் பெருந்திரள் அளவில் ஒன்று கூடியதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேரடியாக வந்து பொதுமக்களிடம் இடையே பேச்சுவார்த்தை நடத்தினர். பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் நேரில் வந்து உறுதியளித்தால் மட்டுமே தங்களது போராட்டத்தை கைவிடுவதாக திட்டவட்டமாக தெரிவித்தனர் இதனால் அப்பகுதியை பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது. சுத்திகரிப்பு ஆலை செயல்படாமல் இருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ? போராட்டக்காரர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள ராஜகம்பீரம் கிராமத்தில் சமையல் கோவில் மண்டபத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் சட்ட ஆலோசனை கூட்டம் சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் முத்து பாரதி தலைமையில் நேற்று நடைபெற்றது. வருகின்ற நவம்பர் 29 அன்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தருவதை பற்றியும் மேலும் எவ்வாறு வரவேற்பு அளிப்பது குறித்து நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார் சிவகங்கை காரைக்குடி திருப்பத்தூர் வழியாக மானாமதுரை வந்து செல்வதாக கூறினார் மேலும் நிர்வாகிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் முத்து பாரதி அறிவுரை வழங்கினார். இக்கூட்டத்தில் ஒன்றிய நகர நிர்வாகிகள் உட்பட்ட பலர் பங்கேற்றனர்..



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில அளவில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடனுதவி வழங்கும் விழாவினை சேலம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவைர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்க தமிழ்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே. எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் 820 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.64.74 கோடி மதிப்பிலான வங்கி கடன் இணைப்புகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார்கள்.

## கூட்டாட்சிக்கு எதிராக இந்தியை திணிக்கும் முயற்சி: அமித் ஷாவுக்கு தவெக கண்டனம்

சென்னை, செப்.17-

கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான இந்தி மொழியை திணிக்கும் முயற்சியை மத்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கருத்துக்கு தவெக கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் எதிர்வினையாற்றியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்தி மொழி நாளையொட்டி தனது எக்ஸ் தளத்தில் வாழ்த்துச் செய்தியை பதிவிட்டுள்ள ஒன்றிய உள்துறை அமைச்சர், “இந்திய நாட்டின் மொழிகள் மற்றும் பேச்சு வழக்குகளுக்கு இடையே ஒரு பாலமாக இந்தி செயல்படுகிறது. இந்தி மொழி வெறும் தகவல் தொடர்பு ஊடகமாக மட்டுமல்லாமல், தொழில்நுட்பம், அறிவியல், நீதி மற்றும் நிர்வாகத்தின் அச்சாணியாக மாறுவதை உறுதி செய்வதே எங்கள் குறிக்கோள். நாட்டின் குடிமக்களை ஒன்றிணைப்பதில் இந்தி முக்கிய பங்கு வகிக்கிறது அனைத்து மொழிகளையும் இணைத்து வளர்ந்த மொழியியல் ரீதியாக தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்குவதில் இந்தி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும்” என்று குறிப்பிட்டு இருக்கிறார்

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருக்கும் ஒரு தேசத்தில், 22 அலுவல் மொழிகளை கொண்டிருக்கும் அரசு நிர்வாகத்தில் ஒற்றை மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது சர்வாதிகார போக்காகும். ஒன்றிய அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக இந்தியை மாற்றுவது லட்சியம் என்று கூறுவது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். பாஜக முதன் முதலில் ஆட்சியமைத்ததிலிருந்து ஒரே நாடு ஒரே ரேஷன், ஒரே நாடு ஒரே தேர்தல் என்று பன்முகத்தன்மை கொண்ட நாட்டை ஒற்றை தலைமையில் சுருக்க முயல்கிறது.

இந்த வரிசையில் தான் இப்போது ஒரே நாடு ஒரே மொழி என்று இந்தியை திணிக்கும் முயல்கிறார்கள். ஒன்றிய அரசு கொண்டுவந்த தேசியக் கல்விக் கொள்கையில் மும்மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தி, கொல்லைப்புறம் வழியாக இந்தியை திணிக்க ஒன்றிய பாஜக அரசு முயன்றது. யார் வேண்டுமானாலும் எந்த மொழியை வேண்டுமானாலும் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் படிக்கலாம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், வலுக்கட்டாயமாக திணிப்பது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது ஆகும்.

தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை என்பதுதான் தமிழக வெற்றி கழகத்தின் கொள்கையும் கூட. இதனை எங்கள் பொதுக்குழுவிலும், செயற்குழுவிலும் தீர்மானமாகவே நிறைவேற்றி இருக்கிறோம்.

இந்தியை திணிப்பதில் ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து தோல்வி கண்ட போதிலும், விடாமல் இந்தியை திணிக்கும் முயன்று வருகிறது. ஒன்றிய அரசின் நிர்வாகத்தில் அலுவல் மொழியாக, 22 மொழிகள் இருக்கும்போது இந்தியை மட்டும் தொழில்நுட்பம் அறிவியல், நீதி, கல்வி மற்றும் நிர்வாகத்தின் அச்சாணியாக மாற்ற நினைப்பது ஏதேச்சாதிகாரப் போக்கு.

ஒன்றியத்தை ஆளும் அரசானது, நாட்டில் உள்ள அத்தனை மதத்தினரையும், மொழியினரையும், மாநிலத்தவரையும் அரவணைத்து செல்ல வேண்டும். இதுவே நாட்டின் ஒட்டுமொத்த பகுதிகளும் வளர்ச்சி அடைவதற்கான வழியாகும். இந்தி பேசாத மாநிலங்கள், பாஜக ஆட்சி இல்லாத மாநிலங்கள் என்று பிரித்துப் பார்ப்பதும், ஒற்றை மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதும் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானவை.

எனவே கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான இந்தி மொழியை திணிக்கும் முயற்சியை ஒன்றிய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், ஒன்றிய அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக இந்தியை மாற்றுவதே லட்சியம் என்ற தன் கருத்தை ஒன்றிய உள்துறை அமைச்சர் திரும்ப பெற வேண்டும் என்றும், தமிழக வெற்றி கழக தலைவரின் ஒப்புதலோடு வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

## புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்: செங்கோட்டையன் கருத்து

ஈரோடு, செப்.17-

அதிமுக ஒன்றிணைய வேண்டும் என்ற எனது கருத்துக்கு தொண்டர்கள், பொதுமக்களிடையே வரவேற்பு கிடைத்துள்ளது. இதை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும், கோபி தொகுதி அதிமுக எம்எல்ஏவுமான செங்கோட்டையன், கடந்த 5ம் தேதி, செய்தியாளர்களிடம் பேசும்போது,; ‘அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியை 10 நாட்களில் தொடங்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால், இதே மனநிலையில் இருப்பவர்களை சேர்த்து ஒருங்கிணைக்கும் பணியை நாங்களே மேற்கொள்வோம்’ என தெரிவித்தார்.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு 10 நாள் கெடு விதித்து செங்கோட்டையன் அறிவிப்பு வெளியிட்டது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த அறிவிப்பு வெளியான அடுத்த நாளே, செங்கோட்டையன் வகித்து வந்த அமைப்புச் செயலாளர் மற்றும் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் கட்சி பொறுப்புகள் பறிக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக கடந்த 7ம் தேதி டெல்லி சென்ற செங்கோட்டையன், மத்திய அமைச்சர்கள் அமித்ஷா மற்றும் நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்துப் பேசினார். அதிமுகவை ஒருங்கிணைப்பது தொடர்பாக அவர்களிடம் பேசியதாக செங்கோட்டையன் தெரிவித்தார். இந்நிலையில், செங்கோட்டையன் விதித்திருந்த 10 நாள் கெடு நேற்று முடிவடைந்த நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த அவரது அறிவிப்பு வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது.

செய்தியாளர் சந்திப்பு: ஈரோடு மாவட்டம் கோபியில் உள்ள ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட அதிமுக அலுவலகத்துக்கு நேற்று காலை வந்த செங்கோட்டையன், முன்னாள் முதல்வர் அண்ணா படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: எம்ஜிஆர், ஜெயலலிதாவின் கனவை நனவாக்கும் வகையில், 100 ஆண்டு காலம் அதிமுக ஆட்சியில் அமர வேண்டும் என்ற நோக்கில் தான் கடந்த 5ம் தேதி மனம் திறந்து பேசினேன். என்னைப் பொறுத்தவரை அதிமுக ஒன்றுபட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

எனது கருத்துக்கு கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் இடையே வரவேற்பு கிடைத்துள்ளது. அவர்களின் கருத்தைத்தான் நான் பிரதிபலித்துள்ளேன். இதை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தாண்டு நடக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில், அதிமுக வெற்றி பெற, அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு, மறப்போம் மன்னிப்போம்’ என்ற அண்ணாவின் பொன்மொழிகளை அவரது பிறந்தநாளில் நினைவூட்டுகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். மத்திய அமைச்சர் அமித் ஷா உடனான சந்திப்பு உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு செங்கோட்டையன் பதில் அளிக்கவில்லை.



# கோவையில் திமுக 72வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்

கோவை, செப்.17-

கோவை திமுக வடக்கு மாவட்டம் ஆர் எஸ்புரம் பகுதி கழகம் 72 வது வட்ட கழகம் சார்பில் சுக்கிரவார்பேட்டை பேட்டை பகுதியில் உள்ள சித்தி விநாயகர் கோவிலில் உறுப்பினர்கள் பொதுகூட்டம் பகுதி கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கார்த்திக் செல்வராஜ் கூறியதாவது ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை உருவாக்கியிருக்கிறது இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழக முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பரப்புரை மேற்கொள்ள திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓரணியில் தமிழ்நாடு வீட்டுக்கு வீடு பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது..

அதன் ஒரு பகுதியாக வடக்கு மாவட்டம் ஆர் எஸ் புரம் 72 வது வட்டக் கழகத்தின் திமுக தொண்டர்கள் ஒவ்வொருவரும் பகுதி மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டு அறிந்து கட்சியின் உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று தெரிவித்தார். மேலும் கூறுகையில் இப்பகுதியில் அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகின்றது. விடுபட்ட வர்களின் பெயர் சேர்க்கையும் நடைபெறுகின்றது.

இந்த பகுதியில் கழக ஆட்சி சிறப்பாக செயல்படுகின்றது. எனவே அனைவரும் கழகத்தின் ஆட்சி சிறப்பாக நடைபெறுவதை பொது மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்று பேசினார்...

இக்கூட்டத்தில் வழக்கறிஞர் பிரசாத் பகுதி கழக நிர்வாகிகள் நாசர் ஆறுச்சாமி சிஆர் ரவிச்சந்திரன் முருகானந்தம் புலவர் பழனிசாமி நவ்ஷாத் கேபிள் அறிவழகன் மற்றும் 72 ஆவது வட்ட இளைஞரணி அமைப்பாளர் சந்தோஷ் குமார் ஆல்வின் விக்னேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்...





# கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, செப்.17-

கன்னியாகுமரி மாவட்ட கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை ஆய்வு மேற் கொண்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. மருத்துவமனையின் வெளிநோயாளிகளை சந்தித்து, அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது.மேலும் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளிடம் அக்கறையுடனும், பரிவுடனும் நடந்து கொண்டு சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பல் மருத்துவ பிரிவில் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறியப்பட்டது.

மேலும் வாரம்தோறும் செவ்வாய்கிழமைகளில் கர்ப்பிணி பெண்களுக்கென்ற பிரத்தியேக நாள் கடைபிடி க்கப்பட்டு வருகிறது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையை முறைகள் குறித்தும், மேலும் அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள கர்ப்பிணி பெண்களின் எண்ணிக்கை, கர்ப்பிணி பெண்களுக்கு இரத்த சோகை வராமல் தடுப்பதற்கு இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகிறா என்பது குறித்தும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறியப்பட்டது.

கர்ப்பிணி பெண்கள் அனைவரும் பயன்பெறும்படி, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் கர்ப்பகால பரிசோதனை தினங்களில் கண்டிப்பாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனவும், இரும்பு சத்துக்கள் அதிகம் உள்ள உணவுகளை அதிகமாக சாப்பிடுவது மிகவும் அவசியம் எனவும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக ஆட்சியர் ஆய்வு

இராமநாதபுரம், செப்.17-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு.ஸ்ரீ புவன் பூஷன் கமல் அவர்கள் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் மாணவ, மாணவிகளின் விடுதிகள் தொடர்பாகவும், அவற்றில் தங்கியுள்ள மாணவ, மாணவிகள் எண்ணிக்கை, மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவு, விடுதியில் மாணவர்கள் சேர்க்கை தொடர்பாகவும், நிஜூ யசஸ்வி ப்ரீமெட்ரிக் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ, மாணவிகள் எண்ணிக்கை, வழங்கப்பட்ட உதவித் தொகை தொடர்பாகவும், 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்ட விலையில்லா சைக்கிள், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது குறித்தும், சலவை இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் டாப்செட்கோ கடன் திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை, பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை, டாப்செட்கோ போர்வெல் திட்டம், கிராமப்புற பெண்கள் உதவி தொகை திட்டம் தொடர்பாகவும், சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு.ஸ்ரீ புவன் பூஷன் கமல் அவர்கள் இராமநாதபுரம் சேதுபதி நகரில் செயல்பட்டு வரும் சமூக நீதி கல்லூரி மாணவர் விடுதி மற்றும் டி பிளாக் பகுதியில் உள்ள சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன், விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை தங்கும் இடம், சமையல் அறை ஆகியவற்றை பார்வையிட்டு, விடுதியில் உள்ள அடிப்படை வசதிகள் குறித்து மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடி கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜி.சந்தீஷ்.இ.கா.ப., அவர்கள்,, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செ.ஹபிபூர் ரஹ்மான் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ராஜா அவர்கள், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ஜூனு அவர்கள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் பேராசிரியர் மரு.அமுதாராணி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.மா.சுமதி அவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சிவகங்கை மாவட்டம் மதகுப்பட்டி திருப்பத்தூர் காளையார் கோவில் ஆகிய துணை மின் நிலையங்களில் நாளை மின்தடை

சிவகங்கை, செப்.17-

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மதகுபட்டி, அலவாக்கோட்டை, சிங்கினிப்பட்டி, அம்மச்சிப்பட்டி, நாமனூர், உசிலம்பட்டி, அழகமானேரி, திருமலை, கல்லராதினிப்பட்டி, வீரப்பட்டி, கீழப்பூங்குடி, பிரவலூர், பேரணிப்பட்டி, ஒக்கூர், திருப்புத்தூர், பிள்ளையார்பட்டி, தென்கரை, கருப்பூர், மல்லாக்கோட்டை திருக்கோஷ்டியூர் காளையார்கோவில், நாட்டரசன்கோட்டை, புலியடிதம்பம், பள்ளித்தம்மம், சருகணி, பொன்னலிக்கோட்டை, கொல்லங்குடடி,கள்ளத்தி, கருங்காலி,கருமந்தக்குடி, சாத்தரசன்கோட்டை, பெரியகண்ணனூர், ஒய்யவந்தான் ஆகிய துணை மின் துணை மின் நிலையத்தில் இருக்கும் அருகில் உள்ள ஊர்களில் மின்தடை இருக்கும் என மின் செயற் பொறியாளர்கள் அறிவித்துள்ளார்கள்..



■ மதுரை வடக்கு வட்டம், சிறுதுரில் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் சம்பில் 110/33 11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவின் குமார் உடன் உள்ளார்.

# சிறப்பான சேவையில் 25 ஆண்டுகள் வெள்ளி விழாவைக்கொண்டாடும் சுந்தரம் ஃபைனான்ஸ்

புதுக்கோட்டை, செப்.17-

சுந்தரம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் புதுக் கோட்டை கிளை, புதுக்கோட்டை வாழ் மக்களுக்கு 25 ஆண்டுகாலமாக சிறப்பான சேவையைத் தொடர்ந்து வழங்கியதை பெருமிதத்துடன் நிறைவு செய்திருக்கிறது. இதன் மூலம் தனது பயணத்தில் வெற்றிகரமாக ஒரு அர்த்தமுள்ள மைல்கல்லை இந்நிறுவனம் எட்டியிருக்கிறது. 25 ஆண்டுகள் நிறைவு என்ற வெறும் கொண்டாட்டமாக இல்லாமல், வாடிக்கையாளர்களுடனான நீடித்த கூட்டாண்மை, பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் புதுக்கோட்டை கிளையின் பாரம்பரியத்தை வடிவமைத்த அவர்களது குடும்பத்தினரின் ஆதரவு ஆகியவற்றை அங்கீகரித்து, நன்றியுணர்வோடு கௌரவிக்கும் ஒரு நிகழ்வாக இன்றைய கொண்டாட்டம் அமைந்தது.



“சுந்தரம் ஃபைனான்ஸில், எங்களுக்கு நிலைப்புத்தன்மையையும், உத்வேகத்தையும் வழங்குவது வெறுமனே நீண்ட பல ஆண்டுகளாக செயல்படுவது மட்டுமல்ல; மக்களுடனான எங்கள் உறவை வரையறுக்கும் உண்மை, புதுக்கோட்டை கிளையானது, அது கடைபிடிக்கும் விழுமியங்களாலும் மற்றும் அது சேவை வழங்கி வரும் சமூக மக்களின் நம்பிக்கையாலும், விசுவாசத்தாலும் வலுவாக நீடித்து நிலைத்திருக்கிறது” என்றார் சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் தமிழ்நாடு ரீஜியன் ஹெட் ராஜேஷ் வெங்கட்

2000ல் நிறுவப்பட்ட புதுக்கோட்டை கிளை, புதுக்கோட் டையில் நிதிச் சேவைகளை மக்கள் எளிதாகப் பெறுமாறு கொண்டு போய் சேர்ப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளது. சிறு வணிக உரிமையாளர்கள், முதல் முறை கடன் பெறுவோர், சுயதொழில் வல்லுநர்கள் மற்றும் போக்குவரத்து வாகன நிறுவன உரிமையாளர்கள் என பல தரப்பினரும் நம்பகமான நிதி கூட்டாளியாக இந்தக் கிளையை கருதுகின்றனர் மற்றும் இதன் நிதி சேவைகளின் மூலம் பயனடைந்திருக்கின்றனர்.

வாடிக்கையாளர்களின் அசையா நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. தலை முறை தலை முறையாக வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்வாதாரங்களைக் கட்டமைக்கவும், நம்பிக்கையுடன் வாழவும் சுந்தரம் ஃபைனான்ஸ் - ன் இக்கிளை உதவியுள்ளது.” என்றார் புதுக்கோட்டை சீனியர் கிளை மேலாளர் ஷி காசிநாதன்

புதுக்கோட்டை கிளையின் பலம் அதன் பணியாளர்களிடம் தான் உள்ளது. பல பணியாளர்கள் தங்கள் பணிக்காலத்தின் (கரியர்) குறிப்பிடத்தக்க பகுதிகளை இங்கு செலவிட்டுள்ளனர்; திறமையுடன் மட்டுமல்லாமல், நேர்மை, புரிந்துணர்வு மற்றும் குறிக்கோளுடனும், அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கியிருக்கின்றனர்.


இந்த மைல்கல் நிகழ்வானது, ஒவ்வொரு சாதனைக்குப் பின்னாலும் அமைதியாக துணைநின்ற பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களையும் கௌரவிக்கிறது. இந்த நீண்ட பயணத்தை சாத்தியமாக்குவதில் அவர்களின் பங்கை அங்கீகரிக்கும் விதமாக, ராஜிவ் லோச்சன் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடப்பட்ட மனமா ர்ந்த பாராட்டுக் கடிதங்கள், பணியாளர்களின் குடும்ப உறுப்பி ர்களுக்கு இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

சுந்தரம் ஃபைனான்ஸ் 2029ல் தனது 75வது ஆண்டு விழாவைக் கொண்டாடத் தயாராகி வரும் வேளையில், இந்த கிளையின் பொன்விழா நிகழ்வானது, நிறுவனத்தின் ஸ்தாபக தத்துவத்தை நேர்மையுடன் சேவை, பணிவுடன் வளர்ச்சி மற்றும் சமூக நலனில் அக்கறை ஆகிய பண்பியல்புகளை மீண்டும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

புதுக்கோட்டை கிளை என்பது வெறும் பணியாற்றும் அமைவிடம் அல்லது ஒரு நிதி நிறுவனம் என்பது மட்டுமல்ல; அது தொடர்ச்சியான சேவை, நற்பண்பு மற்றும் சரியானதைச் செய்வதற்கான அர்ப்பணிப்பின் ஒரு அடையாளச் சின்னமாகவும் திகழ்கிறது,



■ மதுரை மாவட்டம், லேடி டோக் பெருமாட்டி கல்லூரில் கூட்டரங்கில் மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய கல்விக்கடன் மேளா சிறப்பு முகாமில் மாணவமாணவிகளுக்கு கல்விக் கடன் பெறுவதற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சு.வெங்கடேசன் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள். மாநகராட்சி துணை மேயர் திரு.நாகராஜன் அவர்கள் உடன் உள்ளார்



## கிள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, செப்.17-

கன்னியாகுமரி மாவட்ட கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை ஆய்வு மேற் கொண்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. மருத்துவமனையின் வெளிநோயாளிகளை சந்தித்து, அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது.மேலும் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளிடம் அக்கறையுடனும், பரிவுடனும் நடந்து கொண்டு சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பல் மருத்துவ பிரிவில் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறியப்பட்டது.

மேலும் வாரம்தோறும் செவ்வாய்கிழமைகளில் கர்ப்பிணி பெண்களுக்கென்ற பிரத்தியேக நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையை முறைகள் குறித்தும், மேலும் அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள கர்ப்பிணி பெண்களின் எண்ணிக்கை, கர்ப்பிணி பெண்களுக்கு இரத்த சோகை வராமல் தடுப்பதற்கு இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகிறா என்பது குறித்தும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறியப்பட்டது.

கர்ப்பிணி பெண்கள் அனைவரும் பயன்பெறும்படி, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் கர்ப்பகால பரிசோதனை தினங்களில் கண்டிப்பாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனவும், இரும்பு சத்துக்கள் அதிகம் உள்ள உணவுகளை அதிகமாக சாப்பிடுவது மிகவும் அவசியம் எனவும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.



## தமிழ்நாடு அரசின் மூலம் அனைத்து துறைகளின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது

கன்னியாகுமரி, செப்.17-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஏழை எளிய கிராமப்புற மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்களை அறிவித்து அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை அளிக்கும் திட்டம், மக்களை தேடி மருத்துவம், சாலை, பேருந்து, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டங்கள், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், நகர்ப்புற வேலைவாய்ப்புத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது, முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் குறித்தும், தொழிலாளர்களை தேடி மருத்துவம், முதலமைச்சரின் மகளிர் விடியல் பயணத்திட்டம் ஊரக பகுதிகளில் மக்களுடன் முதல்வர், உங்களைத்தேடி உங்கள் ஊரில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பணியின் போது காலமானவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கியது ஆகியவை குறித்தும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்தது, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கியது, உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப் பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்துகொண்டு பயன்பெற்றார்கள்.




■ சிவகங்கை மாவட்டத்தில் நேற்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பிற்கான ஆணைகள் மற்றும் அடையாள அட்டைகளை, சிவகங்கை பகுதிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற் விழாவில் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் மகளிர் திட்ட இயக்குநர் என்.கவிதப்பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன் குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் ஆகியோர் உடன் இருந்தனர்

## வரைவு வாக்குச்சாவடி பட்டியலினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்



தேனி, செப்.17-

தேனி மாவட்ட ஆட்சியரக வளாகத்திலுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு வைப்பறை கூட்ட அரங்கில் அன்று (15.09.2025) வரைவு வாக்குச்சாவடி பட்டியலினை மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, 01.01.2026 ஆம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியல் 2025 சிறப்பு தீவிரத் திருத்தப் பணி நடைபெறவுள்ளது. இதன் முன்சுருக்கத்திருத்தப் பணிகள் (Pre-revision Activities) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் வாக்குச்சாவடிகளை மறுசீரமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, இச்சீரமைக்கும் பணியின் போது கிராமப்புற / நகர்ப்புற வாக்குச்சாவடிகளில் அதிகபட்சமாக 1200 எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில், 1200க்கு மேல் வாக்காளர்களின் எண்ணிக்கை உள்ள வாக்குச்சாவடிகள் இரண்டாக பிரிக்கப்பட உள்ளது. மேலும் 2 கி.மீக்கு மேல் தூரம் உள்ள வாக்குச்சாவடிகளை பிரித்து புதிய வாக்குச்சாவடி அமைத்தல், பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட்டதன் அடிப்படையில் வாக்குச்சாவடி பெயர் மாற்றம், கட்டடம் பழுது ஏற்பட்டதன் காரணமாக மாற்று கட்டடம் ஏற்படுத்துதல் தொடர்பாக, இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில், தேனி மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடிகளை சீரமைத்தல் குறித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு வரைவு வாக்குச்சாவடி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது தேனி மாவட்டத்தில் 1226 வாக்குச்சாவடிகள் உள்ளது. இதனுடன் கூடுதலாக 168 வாக்குச்சாவடி சேர்த்து 1394 என மாற்றியமைக்கவும், ஒரே அமைவிடத்தில் இரண்டிற்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் உள்ள பகுதிகளில் பொதுமக்களின் வசதிக்காக 40 வாக்குச்சாவடி அமைவி டங்களை மாற்றியமைக்கவும், 25 பழுதடைந்த வாக்குச்சாவடி கட்டடங்களை மாற்றியமைக்கவும், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் 4 வாக்குச்சாவடிகளின் பெயர்களை மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஆலோசனை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு மேற்கொள்வது தொடர்பாக, கருத்துக்கள் மற்றும் ஆட்சேயபனைகள் குறித்து ஒரு வார காலத்திற்குள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரிடம் எழுத்துப்பூர்வமாக அரசியல் கட்சியினைச்சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .செய்யது முகமது, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) .சண்முக சுந்தரம், மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .முத்துமாதவன், வட்டாட்சியர்கள் .செந்தில் குமார் (தேர்தல்), .மருதுபாண்டி (பெரியகுளம்), .ஜாஹிர்உசேன் (ஆண்டிபட்டி), .சந்திரசேகரன் (போடிநாயக்கனூர்), .கண்ணன் (உத்தமபாளையம்) மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வி கடன் மேளா

கன்னியாகுமரி, செப்.17-

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் இரண்டாவது கல்விக் கடன் மேளா வருகிற 18.09.2025 அன்று கருங்கல் பெத்லஹேம் பொறியியல் கல்லூரியில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் காலை 10 மணிக்கு தொடங்கி வைக்கப்பட உள்ளது. மேற்படி முகாமில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் வங்கிகளும் பங்கேற்கின்றன.

கல்விக்கு பணம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக சிறப்புக் கல்விக்கடன் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. முதலாவது கல்விக் கடன் மேளா கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் செப்டம்பர் 10 ம் தேதி அன்று நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக வருகிற 18.09.2025 அன்று கருங்கல் பெத்லஹேம் பொறியியல் கல்லூரியிலும், 25.09.2025 அன்று மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியிலும், 10.10.2025 அன்று சுங்கான்கடை புனித சேவியர் பொறியியல் கல்லூரியிலும் நடைபெற உள்ளது. மேற்படி கல்விக்கடன் முகாம்களில் மாணவர்கள் கலந்து கொண்டு கல்விக்கடன் விண்ணப்பம் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. https://pmvidyalakshmi.co.in பி.எம் வித்யாலட்சுமி போர்டல் மூலம் கல்விக்கடன் பெற விண்ணப்பிக்கவும்.

மேலும் கல்விக் கடன் பெற கல்லூரி சேர்க்கைக்கான சான்று, கல்விக் கட்டண விவரங்கள், 10, 12ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் பெற்றோர்களுடைய பான் கார்டு, ஆதார் அட்டை உள்ளிட்ட தேவையான அனைத்து ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்தில் செயல்பட்டு வரும் உதவி மையத்தில் கல்விக்கடன் குறித்து விண்ணப்பம் செய்வதில் ஏற்படும் சந்தேகங்களை 9944445202 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விளக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## உடன்குடி அனல்மின் நிலையத்தில் சோதனை மின்னுற்பத்தி தொடக்கம்: மின்வாரிய அதிகாரிகள் தகவல்

சென்னை, செப்.17-

உடன்குடி அனல்மின் நிலையத்தில் சோதனை மின்னுற்பத்தி தொடங்கப் பட்டுள்ளதாக, மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் தலா, 660 மெகாவாட் திறனில், இரண்டு அலகுகள் உடைய அனல்மின் நிலையத்தை, ரூ.13,076 கோடியில் மின் வாரியம் அமைத்து வருகிறது. 2012ம் ஆண்டு திட்டம் அறிவிக்கப்பட்ட நிலையில். கட்டுமான பணிகள், கடந்த 2017ம் ஆண்டு தொடங்கப்பட்டது. உடன்குடி மின்நிலையத்துக்கு நிலக்கரி எடுத்து வருவதற்காக, உடன்குடி கடற்கரையில் இருந்து கடலில், 5 கி.மீ., துாரத்துக்கு நிலக்கரி முனையம் அமைக்கப் பட்டு உள்ளது.



மின்நிலையத்தின் கட்டுமான பணிகளை, மத்திய அரசின் பிஎச்இஎல் நிறுவனம் மேற்கொள்கிறது. 2021 22ம் ஆண்டில் மின்னுற்பத்தி தொடங்க திட்டமிடப்பட்டது. ஆனால், கட்டுமான பணிகள் முடிக் கப்படாததால் திட்டமிட்டபடி மின்னுற்பத்தியை தொடங்க முடியாத நிலை ஏற்பட்டது. இந் நிலையில், கடந்த 11ம் தேதி உடன்குடி மின்நிலையத்தின் முதல் அலகில், சோதனை மின்னுற்பத்தி துவங்கியுள்ளது. அப்போது, 87 மெகாவாட் மின்னுற்பத்தி செய்யப்பட்டது. இந்த மின்சாரம், மின் கட்டமைப்பில் சேர்க்கப் பட்டது.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: உடன்குடி அனல் மின் நிலையத்தின் முதல் அலகில் பல தொழில்நுட்ப சவால்களை கடந்து, தொடர் முயற்சியின் காரணமாக சோதனை மின்னுற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. முன்னதாக, சோதனை செய்த போது 10 தொழில்நுட்ப இடர்பாடுகள் கண்டறியப்பட்டு, அவை சரி செய்யப்பட்டது. தற்போது, கனரக உலை எண்ணெய் பயன்படுத்தி, மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. கப் பலில் இருந்து முனையத்துக்கு நிலக்கரி எடுத்து வருவதற்கான அமைப்பு ஏற்படுத்தும் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

வணிக மின்னுற்பத்தியை தொடங்க திட்டமிட்டபடி அனைத்து அலகுகளில் உற்பத்தி செய்ய வேண்டும். ஒரு மின்நிலையம் முழு திறனில், 72 மணி நேரத்துக்கு தொடர்ந்து மின்னுற்பத்தி செய்த பின், வணிக மின் உற்பத்தி துவங்கியதாக அறிவிக்கப்படும். எனவே, உடன்குடியில் சோதனை பணிகளை விரைவாக முடித்து, இந்தாண்டு இறுதிக்குள் வணிக மின் உற்பத்தி துவக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## முதலமைச்சரை த.வெ.க தலைவர் விஜய் மரியாதை குறைவாக பேசி இருப்பது கண்டிக்கத்தக்கது: காட்பாடியில் வேலூர் எம்.பி கதிர்ஆனந்த் பேட்டி

வேலூர், செப்.17-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடியில், அண்ணா பிறந்தநாள் விழா முன்னிட்டு மாபெரும் நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளித்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை த.வெ.க தலைவர் விஜய் மரியாதை குறைவாக பேசி இருப்பது கண்டிக்கத்தக்கது என காட்பாடியில் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. கூறினார்.



அண்ணாதுரை பிறந்த நாள் விழா காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரை பிறந்தநாள் விழா சித்தூர் பஸ் நிலையம் அருகில் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு பகுதி செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான எம். சுனில்குமார் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., கலந்து கொண்டு முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரை உருவ சிலையை, அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அவருடைய உருவப்படத்திற்கும் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

விழாவில் வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாநகராட்சி கவுன்சிலர்கள் கே.ஜி.சீனிவாசன், டீடா சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அதைத்தொடர்ந்து கதிர்ஆனந்த் எம்.பி., நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

காட்பாடியில் மற்றொரு மேம்பாலம் காட்பாடி பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்க மற்றொரு மேம்பாலம் அமைக்க மத்திய அரசு சார்பில் டெண்டர் விடப்பட்டுள்ளது. ஒப்பந்தம் எடுத்தவர் சில காரணங்களால் பணியை துவங்காமல் உள்ளார். மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து பணிகளை துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

லத்தேரியை பொறுத்த வரையில் லத்தேரி முதல் ஜோலார்பேட்டை வரை உள்ள ரெயில்வே கிராசிங்கில் பொதுமக்களுக்கு ஏதுவாக சுரங்கப்பாதை அமைக்க மத்திய அரசிடம் கேட்டிருந்தோம். மத்திய அரசும் ஒப்புதல் அளித்திருக்கின்றது. அதற்கான பணியும் விரைவில் தொடங்கப்படும்.

கண்டிக்கத்தக்கது...

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய், முதலமைச்சரை முதலில் அங்கிள், தற்பொழுது மை டியர் சி.எம். என பேசி உள்ளார்.

உலகமே வியந்து பார்க்கும் ஒரு மூத்த முதலமைச்சரை இவ்வளவு மரியாதை குறைவாக இது போன்று விமர்சனங்கள் செய்வது கண்டிக்கத்தக்கது. ஒரு முதலமைச்சரை கிண்டல் செய்வது, கேலி செய்வது எல்லாம் தமிழகத்தில் ஆரோக்கியமான அரசியலுக்கு வழி வகுப்பதல்ல.

இளையராஜா சிம்பொனி விழாவில் 2026ல் மீண்டும் முதலமைச்சர் ஸ்டாலின் என நடிகர் ரஜினிகாந்த் பேசி உள்ளார். அவரே சொல்லிவிட்டார். விடுங்க போதும். இவ்வாறு அவர் கூறினார்.



# குடியாத்தத்தில் புதிய நீதிக் கட்சி சார்பில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா

குடியாத்தம், செப்.17-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் நகரம், புதிய நீதிக் கட்சி நிறுவன தலைவர் மற்றும் கல்வி குழுமத்தின் தலைவருமான ஏ.சி.எஸ். அவர்களின் ஆலோசனைக்கிணங்க, முன்னாள். முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாள் விழா, புதிய நீதி கட்சியின் கைத்தறி காவலனும், குடியாத்தம் நகர செயலாளர் எஸ்.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக நகர செயலாளர் ஜெ.கே.என்.பழனி, புதிய நீதி கட்சியின் மண்டல செயலாளர் பி.சரவணன், மாவட்ட செயலாளர் ஆர்.பி.செந்தில், புதிய நிதி கட்சியின் பொறுப்பாளர்கள் எஸ்.வெங்கடேசன், ம.சசிகுமார், சி.வெங்கடேசன், திருநாவுக்கரசு, முரளி, நந்தகுமார், சுந்தர்ராஜன், மாகி, ஹேமலதா, மோகன் மற்றும் அதிமுக நிர்வாகிகள், வழக்கறிஞர் கோவிந்தசாமி, வி.இ.கருணா, கே.வி.ராஜேந்திரன், மெடிக்கல் சரவணன், கோல்டன் குமரன், மற்றும் புதிய நீதி கட்சி, அதிமுக நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்து மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்ன தானங்கள் வழங்கப்பட்டது.





# தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க கிளை கூட்டம்

மானாமதுரை, செப்.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தமுஎதச கிளைக் கூட்டம் நேற்று முன்தினம் 15.09.2025 அன்று மாலை 6.30 மணிக்கு தோழர் பாரதிசத்யா இல்லத்தில் கிளைத்தலைவர் தோழர் க. தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட மாநாடு குறித்த மாவட்டக்குழு முடிவுகளை மாவட்டப்பொருளாளர் தோழர் வெ. பாலமுருகன் அவர்கள் விளக்கி பேசினார்.

மாவட்ட மாநாட்டில் நமது கிளையின் சார்பாக கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் குறித்து கிளைச்செயலாளர் தோழர் ஓ. ரசீந்திரகுமார் அவர்கள் விளக்கி பேசினார்.

2025 க்கான உறுப்பினர் சேர்க்கை குறித்து கிளைத் தலைவர் தோழர் க. தேவதாஸ் அவர்கள் விளக்கி பேசினார்.

மாவட்ட மாநாட்டிற்கு நமது கிளையின் சார்பாக 200 தண்ணீர் பாட்டில்கள் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

மண்பாண்ட கண்காட்சிக்கான நமது கிளை ஏற்றுக்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட மாநாட்டிற்கான போஸ்டரை நகர் முழுவதும் ஒட்டுவது என தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட மாநாட்டை விளம்பரபடுத்தி ஒரு பிளக்ஸ் வைப்பது என முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட மாநாட்டின் பிரதிநிதிகள் நுழைவு கட்டணத்தை கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு வசூல் செய்து கட்டுவது என தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட மாநாட்டில் 6 மாவட்டக்குழுஉறுப்பினர் பிரதிநிதிகள், 2 மாணவர்பிரதிநிதிகள், 1 பெண்பிரதிநிதி, 5பொதுப்பிரிவினர் பிரதிநிதிகள் என 14 பிரதிநிதிகள் மானாமதுரை கிளைக்கு ஒதுக்கப்பட்டது.

மாவட்டக்குழு பிரதிநிதிகள்:

1. தேவதாஸ் 2.பாலமுருகன் 3. ரசீந்திரகுமார் 4.ராஜாராமன் 5. செல்வம் 6. நந்தினி

மாணவர் பிரதிநிதி:

7.பாரதி 8. சரவணன்

பெண் பிரதிநிதி:

9.தேன்குழலி

பொதுப்பிரிவிக்கான பிரதிநிதிகள்:

10.சோமசுந்தரபாரதி

11. பாரதிசத்யா

12.அழகுமுருகன்

13. பொன்னையா

14. 14. சபரிராஜன்

மாற்றுப்பிரதிநிதிகளாக

1.லூர்து 2. குருசெல்வம் 3. அலைகள்நாராயணன் ஆகியோரை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாவட்ட மாநாட்டின் முதல் நாள் அக்டோபர் 4,2025 சனிக்கிழமை மாலையில் நடைபெறும் கலைப்பேரணியிலும், கருத்தரங்கிலும் கிளைநிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

2025க்கான உறுப்பினர் சேர்க்கை இதுவரை 80 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மாவட்ட மாநாட்டிற்குள் 200 உறுப்பினர்கள் சேர்ப்பது என முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக கிளைப் பொருளாளர் பாரதி தங்கராஜ் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் கைத்தறி அணிவித்து நன்றி கூறினார்.

இக்கிளைக்கூட்டத்தில் தேவதாஸ், பாலமுருகன், ரசீந்திரகுமார், பாரதிதங்கராஜ், ராஜாராமன், செல்வம், நந்தினி, சோமசுந்தரபாரதி, பாரதிசத்யா, பொன்னையா, சபரிராஜன், பாஸ்கரன், பரணி ஆகியோர் கலந்துகொண்டனர்.



# உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஜடியில் அண்ணா சிலைக்கு மரியாதை

வேலூர், செப்.17-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஜடி பல்கலைக்கழக வளாகத்தில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, திமுக நிறுவனரும், முன்னாள் தமிழக முதல்வருமான பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்தநாளையொட்டி, வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன், அண்ணாவின் திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் துணைத்தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், செயல் இயக்குநர் சந்தியா பென்டரெட்டி, உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன், துணைவேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணைவேந்தர் பார்த்த சாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி, விஜடி பல்கலைக்கழக அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



■ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவி ல்ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிகுழுக்களுக்கு ரூ.3500 கோடி வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில்திருப்பாலை EMG யாதவா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் 1702 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 131 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்பு மற்றும் 1480 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்கள். மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த் ,சோழவந்தான் சட்டமன்றஉறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர். இந்நிகழ்ச்சியில் ஊரகப் பகுதியைச் சார்ந்த 1066 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 68.79 கோடியும், நகர்ப்புர பகுதியில் 636 மகளிர் குழுக்களுக்கு ரூபாய் 62.21 கோடியும் என மொத்தம் 1702 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 131 கோடி கடனுதவியும், 177 மகளிர் சுயஉதவிக் குழுக்களை சார்ந்த 1480 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

# காவல்துறை அறிவிப்பு

சிவகங்கை, செப்.17-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை உட்கோட்டம், காளையார்கோவில்காவல் நிலைய குற்ற எண் 86/2006 பிரிவு: 147, 148, 323, 324, 326, 307 IPC r/w 149 IPC-ன் கீழ் குறிக்கப்பட்ட வழக்கானது சிவகங்கை மாவட்ட தலைமைய குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் SC No: 67/2017ன் படி வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வருகின்றது.

மேற்படி வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரியான சிவகங்கை கம்பர் தெரு முத்து மகன் செல்வமுத்து என்பவருக்கு மேற்படி நீதிமன்றத்தில் கடந்த 17.11.2022 முதல் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு ஆஜராகாமல் இருந்ததால் அவருக்கு பிணையம் அறிவித்தவரன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க மேற்கொண்டப்போதே பினணயாளர்கள் இரண்டும் நபரும் இருந்துவிட்டார்கள்.

பினணயாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளதாக பிணை வழங்கியது ரத்து செய்யப்பட்டது. எனவே மேற்படி வழக்கின் எதிரியான செல்வமுத்து என்பவர் வரவிருக்கும் 29.09.2025 இல் தேதியோ அல்லது அதற்கு முன்னரே மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில்மேற்படி எதிரியான செல்வமுத்து என்பவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ சான்றிதழ் பாடப்பிரிவுக்கான தகுதிப் பட்டியல் வெளியீடு

சிவகங்கை, செப்.17-

அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகளில் காலியாக உள்ள மயக்கமருந்து டெக்னீஷியன் 18 மற்றும் தியேட்டர் டெக்னீஷியன் 19 இடங்களை மாவட்ட அளவில் நிரப்புவதற்கான சேர்க்கை நடைபெற்று வருகிறது. இதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் 16.09.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களால் வெளியிடப்பட்டது. அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் துணைமுதல்வர் உடன் இருந்தனர். தகுதிப் பட்டியல் www.gsmch.ac.in வலைத்தளத்திலும், மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு பலகையிலும் மற்றும் இக்கல்லூரி அறிவிப்பு பலகையிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தகுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மாணவர்கள் தங்களது அசல் மற்றும் சான்றிதழ் நகல்களுடன் 20.09.2025 ஆம் தேதிக்குள்ளோ அல்லது அதற்கு முன்னதாகவோ அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் அலுவலகத்தை அணுகி சேர்க்கை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.



■ நாகர்கோவில் மாநகராட்சி 14வது வார்டுக்குட்பட்ட வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தில் ரூ.13.30 இலட்சம் மதிப்பீட்டில மறுசீரமைக்கபட்ட புதிய நவீன கட்டன கழிப்பறையை நாகர்கோவில் மாநகராட்சி மேயர். ரெ.மகேஷ். மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா. இணைந்து .பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மேலும் கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் மற்றும் இலவச கழிப்பறை போன்ற பகுதியை ஆய்வு செய்து சுகாதார முறையில் இருக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். உடன் மண்டல தலைவர்கள் ஜவஹர் அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர் கலாராணி உதவி செயற்பொறியாளர் ரகுராமன் மாநகர நல அலுவலர் Dr. ஆல்பர் மதியரசு. பகுதி செயலாளர் சேக்மீரான் மாநகர அவைத்தலைவர் பன்னீர் செல்வம் செயற்குழு உறுப்பினர் சதாசிவம். தி மு க நிர்வாகிகள் தன்ராஜ், ஜெபசிங் ராணி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், தி மு க நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் 21ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு கொடியேற்றி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம், செப்.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் 21ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் அறிவுத்தின்படி தாம்பரம் தெற்கு பகுதி கழக செயலாளர் கேட் தர்மா தலைமையில் 64வது வட்ட நிர்வாகி கலா ஆறுமுகம் ஏற்பாட்டில் 64வது வட்டக் கழக செயலாளர் கன்னியப்பன் முன்னிலை நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் தொகுதி பொறுப்பாளரும் செங்கல்பட்டு மாவட்ட துணை செயலாளருமான மா.செழியன் கலந்து கொண்டு கேப்டன் அவர்களின் புகைப்பட த்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் மார்க்கெட் ஞானப்பால், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தெற்கு பகுதி துணைச் செயலாளர்கள் டி.ஏழுமலை, தமிழரசி, மாவட்ட பிரதிநிதி பாலமுருகன், கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் குமார், தெற்கு பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் திலகா, தெற்கு பகுதி இளைஞரணி செயலாளர் எஸ்.விஷ்ணு, துணைச் செயலாளர் கிருபாகரன், 61வது வட்ட செயலாளர் ராசி மகேந்திரன், 46வது வட்டக் செயலாளர் காந்தி, அவைத்தலைவர் காஜா மொய்தீன், தேன் என்கின்ற லட்சுமணன், 64வது வட்ட நிர்வாகிகள் ஜி.சங்கர், ஆர்.பாஸ்கரன், கமல்தாஸ், விக்னேஷ், விமலா, ஆறுமுகம், சதீஷ், மைத்ரேயன், 62வது வட்ட பிரதிநிதி விக்கி மாவட்ட நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்







# சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையில் அன்னை வேளாங்கண்ணி கல்விக் குழும மாணவ, மாணவியர்கள் 100 மரக்கன்றுகளை நட்டனர்

சென்னை, செப்.17-

சென்னை, சைதாப் பேட்டை, அன்னை வேளாங் கண்ணி கல்விக் குழுமம், கலைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் தேசிய ஒருங்கிணைந்த மன்றம் NIFAA (NATIONAL INTEGRATED FORUM FOR ARTISTS AND ACTIVISTS) மற்றும் INTERNATIONAL EXNORA அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு வனத்துறை ஆகியவை இணைந்து 16.09.2025 செவ்வாய்க் கிழமையன்று படப்பை அடுத்த வைப்பூரில் மரக்கன்று நடும் விழா நடைப்பெற்றது.

அன்னை வேளாங் கண்ணி கல்விக் குழுமத்தின் செயலர், சமூக சேவகர், இயற்கை ஆர்வலருமான முனைவர் தே.தேவ் ஆனந்த் அவர்கள் முன்னிலையில் 100 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை கல்லூரி மாணவ, மாணவியர்கள் நட்டனர்.

இதில் NIFAA தமிழ்நாடு மாநில ஒருங்கிணைப்பாளர் திரு சுர்ஜித்சிங் மதன், வண்டலூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு சந்தானம் ஆகியோர் உடனிருந்தனர். இந்நிகழ்வில் அன்னை வேளங்கண்ணி கல்விக் குழுமத்தைச் சார்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டி வைத்தனர். மேலும் அறக்கட்ளையின் தன்னார்வலர்களான மோகன், ஜெகதீஷ், கண்ணன் ஆகியோர் மரக்கன்று நடும் விழாவில் இணைந்து முன்னேற்பாடுகளை செய்திருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161